

நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் சட்டமன்றத் தொகுதி நாமக்கல் பூங்கா சாலையில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான . கனிமொழி கருணாநிதி எம்.பி. வேட்பாளர் ப. இராணியை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார். முன்னதாக புதுச்சத்திரம் ஒன்றியத்தில் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், முன்னாள் மத்திய இணை அமைச்சர் செ. காந்திசெல்வன்,நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, நாமக்கல் நகரக் கழக செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் நவலடி, பழனிவேல், கௌதம், ஜெயபிரகாஷ், பேரூர் கழக செயலாளர் செல்லவேல் (எ) செல்லப்பன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




அரியலூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர் லதா பாலுவை ஆதரித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் ஒன்றியம் தவ்தாய் குளம் கிராமத்தில் உதயசூரியன் சின்னத்தில் வாக்காளப் பெருமக்களிடம் வாக்கு சேகரித்து பிரச்சார பயணத்தை துவங்கி வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர் கு. சின்னப்பா, தேமுதிக மாவட்டச் செயலாளர் இராம.ஜெயவேல் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம். ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திருவரங்குளம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட தட்சிணாபுரம், களங்குடி, கத்தக்குறிச்சி,சேந்தாக்குடி உள்ளிட்ட ஊராட்சிகளுக்குட்பட்ட கிராமங்களில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். நிகழ்வில் திருவரங்குளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அரு. வடிவேல் மற்றும் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.



கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். செல்லக்குமார் வேட்பாளர் அறிமுக மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். இந்த கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், தேர்தல் பொறுப்பாளர் பார். இளங்கோவன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் சீனிவாசன்,அன்பரசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, பொருளாளர் கதிரவன் , பொதுக்குழு உறுப்பினர் சித்ரா சந்திரசேகர், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி , ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், மகேந்திரன், நாராயணன், தேங்காய்.சுப்பிரமணி, சரவணன் , பேரூர் கழக செயலாளர் பாபு மற்றும் கூட்டணி கட்சிகளான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, வெற்றி வேட்பாளர் டாக்டர் வை.முத்துராஜா மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10, 15, 16 உட்பட்ட மச்சுவாடி, வண்டிப்பேட்டை, பிருந்தாவனம், பூ மார்க்கெட் மற்றும் காய்கறி மார்க்கெட் ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் த.சந்திரசேகரன் , மாநகர மேயர் திலகவதி செந்தில் , மாநகர துணை மேயர், புதுக்கோட்டை வடக்கு மாநகரக் கழக பொறுப்பாளர் எம்.லியாக்கத்அலி, சுப சரவணன், புதுக்கோட்டை தெற்கு மாநகர கழக பொறுப்பாளர் வே.ராஜேஷ் , க.நைனா முகமது , சி.ஆர்.வி.சித்ரா மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளும், மாமன்ற உறுப்பினர்களும், வட்டக் கழகச் செயலாளர்களும், கழக முன்னோடிகளும், கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பள்ளிவாசல்களில், மதச்சார்பற்ற கூட்டணிக் வேட்பாளரும் அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர். மாவட்டக் கழகச் செயலாளர். அமைச்சர் இரா. இராஜேந்திரன். சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் நடை பயிற்சி மேற் கொண்டவர்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.



கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள், வீராங்கனைகள் கூட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் என்.ஆர்.கார்த்திகேயன் அறிமுகக் கூட்டம் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி உள்பட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் பூண்டி.கே.கலைவாணன் செல்லூர் அரசு கல்லூரி மாணவிகளுடன் புதுமைப்பெண் திட்டம் குறித்து உரையாடி பெண்களின் கல்விக்கும், வாழக்கை தர உயர்வுக்கும் தி.மு.க. ஆட்சி தொடர உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார் .



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளரும், மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன் செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் கிள்ளியூரில் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்தார். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம.எம்.சித்திக், ஏ.சி.என். விஜயபாலன், செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் அமிர்த.விஜயகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே. மருது, மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் எழில் நம்பி மற்றும் கூட்டணி கட்சியினர் கழகத்தினர் உள்ளனர்.